DMC CUM JM COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 110 /2026 , Kunnam P.S. PW -2.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மித்லேஸ்காந்தி ராம் | Nationality | : | -இந்தியன் |
| Father/ Husband Name | : | வரதராஜன் | Calling | : | தலைமை காவலர் |
| Village | : | குன்னம் காவல் நிலையம் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 38/2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 23.06.2026. | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் தற்போது குன்னம் காவல் நிலைய தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 28.09.2025 ம் தேதி அன்று குன்னம் காவல் நிலையத்தில் என்னுடன் தலைமை காவலர் ரமேஷ் என்பவரும், உதவி ஆய்வாளராக சங்கர் என்பவரும், பணியில் இருந்தோம். அன்றைய தினத்தில் நானும் மற்ற தலைமை காவலர், உதவி ஆய்வாளருடன் மது ஒழிப்பு சம்பந்தமாக குன்னம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட குன்னம் , மேலமாத்தூர் ஆகிய பகுதிகளில் கண்காணிப்பு பணியில் இருந்தபோது ஓலைப்பாடி கிராம பகுதியில் ஒரு நபர் எங்களை பார்த்ததும் தப்பியோட முயற்சித்ததும், அவரை மடக்கி பிடித்து விசாரித்தபோது அவர் தன் வீட்டின் பின்புறம் 180 ML அளவுள்ள SNJ Brandy 17 பாட்டில்கள் வைத்திருந்தார். எதிரி தன் பெயர் இளையராஜா என்றும், அரசு அனுமதி இன்றி அரசு மது பாட்டில்களை சிறுக சிறுக வாங்கி சட்டவிரோதமாக அதிக விலைக்கு விற்பதாக சொன்னார். அவரை கைது செய்து மேற்கண்ட வழக்கு சொத்துக்களை கைப்பற்றுதல் மகசர் மூலமாக எங்கள் முன்னிலையில் வழக்கு சொத்துகள் உதவி ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. **அந்த கைப்பற்றுதல் மகசரில் நான் 2-வதாக கையொப்பம் செய்துள்ளேன்** பின்னர் காவல் நிலையம் எதிரியை கொண்டு வந்து எதிரியின் மீது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். பின்னர் பின்னர் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சென்ற நாள் குறித்து பொதுநாட்குறிப்பேட்டினை என்னிடம் இருந்து உதவி ஆய்வாளர் கேட்டு பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடம் குறித்து பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை

என்றால் சரிதான். நாங்கள் எதிரியிடம் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் அது பொது சந்தையில் எளிதாக கிடைக்கும் என்பதாலும், புள்ளிவிபரக்கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்பதால் அங்கு உள்ள நபர்களை முன்னிலைப்படுத்தி அவர்கள் முன்னிலையில் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**–இல்லை

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJMCOURT, KUNNAM